





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 22.12.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்








## தமிழக நிகழ்வுகள்

- **தமிழகம் முழுவதும் வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 23-ம் தேதி வெளியிடப்படுகிறது.**
    - ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
    - ஜனவரி 1-ம் தேதி 18 வயது நிறைவடைந்தவர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வாய்ப்பு வழங்கப்படுகிறது.
    - இதற்கான சிறப்பு முகாம்கள் நடத்த மாநகராட்சி, வட்டாச்சியர் அலுவலகங்களில் ஜனவரி மாதம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள் :**
        - தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு.
        - தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையாளர் பழனிச்சாமி
        - இந்திய தேர்தல் ஆணையம் குறித்து அரசியலமைப்பு பிரிவு 324 குறிப்பிடுகிறது.
        - உள்ளாட்சி அரசாங்க அமைப்புகளுக்கு மாநில தேர்தல் ஆணையம் தேர்தல் நடத்தும் என அரசியலமைப்பு பிரிவு 243 K குறிப்பிடுகிறது.

## தேசிய நிகழ்வுகள்

We Shine Academy™

- **மகாராஷ்டிரத்தில் ரூ.2 லட்சம் வரை விவசாயக் கடன்கள் தள்ளுபடி** செய்யப்படுவதாக **முதல்வர் உத்தவ் தாக்ரே** அறிவித்துள்ளார்.
    - விவசாயிகளின் பயிர் கடன்களை தள்ளுபடி செய்வதற்காக "மகாத்மா ஜோதிராவ் பூலே கடன் தள்ளுபடி திட்டத்தை" மாநில அரசு தொடங்குகிறது.
    - மேலும் மகாராஷ்டிராவின் விதர்பா பகுதியில் உள்ள சுர்ஜாகாட் நகரில் உருக்காலையும் அமைக்கப்பட உள்ளதாக முதல்வர் அறிவித்துள்ளார்.
    - **செய்தி துளிகள் :**
        - மகாராஷ்டிரா அரசு விதர்பா நீர்பாசன திட்டத்தின் இலக்கு வருடமாக 2023-ம் ஆண்டை நிர்ணயித்துள்ளது.
        - சமூக சீர்திருத்தவாதியான ஜோதிராவ் பூலே 1873-ம் ஆண்டு சத்ய சோதக் சமாஜம் எனும் அமைப்பினை தோற்றுவித்தார்.
        - ஜோதிராவ் பூலே ஒடுக்கப்பட்டோர் மற்றும் பெண்களுக்காக 1848-ம் ஆண்டு பள்ளியை தொடங்கினார்.

- **இந்தியா – சீனா எல்லைப் பேச்சுவார்த்தையில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்தோவல் பங்கேற்கிறார்.**
    - இந்தியாவும் சீனாவும் 3488 கி.மீ தூர எல்லைப் பகுதியை பகிர்ந்து கொள்கின்றன.

- அருணாச்சல பிரதேசத்தை தெற்கு திபெத்தின் ஒரு பகுதியென சீன அரசு உரிமை கொண்டாடி வருகிறது.
- **செய்தி துளிகள் :**
  - இந்தியா அதிகபட்சமாக வங்கதேசத்துடன் 4096 கி.மீ தூர எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளது.
  - குறைந்தபட்சமாக இந்தியா ஆப்கானிஸ்தானுடன் 106 கி.மீ தூர எல்லைப் பகுதியை பகிர்ந்துள்ளது.
  - இந்திய – சீன எல்லை பிரச்சனை தொடர்பாக இதுவரை 21 சுற்றுகளாக பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **அமெரிக்க விண்வெளி பாதுகாப்பு படைப்பிரிவு : அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைத்தார் டிரம்ப்.**
  - 70 ஆண்டுகளுக்கு பிறகு இந்த படைப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.
  - அமெரிக்க விமானப் படையின் கீழ் இப்படைப்பிரிவு செயல்படும்.
  - **செய்தி துளிகள் :**
    - அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்
    - அமெரிக்க பாதுகாப்பு படையின் புதிய பிரிவாக மேரிலாண்ட் மாகாணத்தில் உள்ள ஆண்ட்ரு விமான படை தளத்தில் விண்வெளி பாதுகாப்பு படை தொடங்கப்பட்டது.


We Shine Academy™

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் நாசா கடந்த 1958-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **இந்திய குத்துச்சண்டை லீக் போட்டியின் முதல் சாம்பியன் பட்டத்தை குஜராத் ஜெயின்ட்ஸ் அணி கைப்பற்றியது.**
    - பிக் பௌட் என அழைக்கப்படும் இந்திய குத்துச் சண்டை லீக்கின் இறுதிப் போட்டி புது தில்லியில் நடைபெற்றது.
    - இந்திய குத்துச் சண்டை சம்மேளணம் சார்பில் இப்போட்டிகள் நடத்தப்பட்டன.
    - **செய்தி துளிகள் :**
        - இந்திய குத்துச்சண்டை சம்மேளணத்தின் தலைவர் அஜய் சிங் ஆவர்.
        - அக்டோபர் மாதம் நடைபெற்ற உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் மேரி கோம் வெற்றி பெற்றுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **தேசிய கணித தினம் - டிசம்பர் 22**
    - காரணம் : கணித மேதை சீனிவாசனின் பிறந்த தினமான டிசம்பர் 22-யை மத்திய அரசு தேசிய கணித தினமாக கடைபிடிக்கிறது.

- இவர் 1887-ம் ஆண்டு டிசம்பர் 22-ம் தேதி பிறந்தார்.
- **செய்தி துளிகள் :**
  - நடுவண் அரசு 1962-ம் ஆண்டு சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டு ராமானுஜத்தை கௌரவித்தது.
  - கணித மேதை ராமானுஜம் "பெர்னௌலிஸ் எண்கள்" எனும் தலைப்பில் கட்டுரையை எழுதியுள்ளார்.
  - கணித மேதை ராமானுஜத்திற்கு இங்கிலாந்து பல்கலைகழகம் 1918-ம் ஆண்டு எப்.ஆர்.எஸ் பட்டம் வழங்கி கௌரவித்தது.

## திருக்குறள்

**குறள் எண் : 54**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம்

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மைஉண் டாகப் பெறின்.**

**விளக்கம் :** மனைவியிடத்தில் கற்பு என்னும் மன உறுதி உண்டாகியிருக்கப் பெற்றால், கணவன் அடைய கூடியவற்றுள் அம்மனைவியைவிட மேலான பொருள் வேறு இல்லை.